ஊவா மாகாண சபை - 2022

# 1. நிதிக்கூற்றுக்கள்

## 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

ஊவா மாகாண சபையின் 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று, மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதி செயலாற்றல் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று முக்கியமான கணக்கீட்டு கொள்கைகள், ஏனைய விளக்கமளித்தல் தகவல்களின் பொழிப்புக்கள் என்பவற்றை உள்ளடக்கிய 2022 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 1987 இன் 42 ஆம் இலக்க மாகாண சபைகள் அதிகாரச் சட்டத்தின் 23(1) ஆம் பிரிவு மற்றும் 2018 இன் 19 அம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்திலுள்ள ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154 (3) ஆம் உறுப்ரையில் உள்ளடக்கப்பட்ட ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. மாகாண சபைகள் அதிகாரச் சட்டத்தின் 23 (2) ஆம் பிரிவு மற்றும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 11 (1) ஆம் உப பிரிவிலுள்ள ஏற்பாடுகளின் பிரகாரம் பொழிப்பு அறிக்கை 2023 மே 29 ஆந் திகதி வழங்கப்பட்டதுடன் தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 11 (2) ஆம் உப பிரிவின் பிரகாரம் விபரமான முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கை 2023 மே 31 ஆந் திகதி வழங்கப்பட்டது. அரசியலமைப்பின் 154 (6) ஆம் உறுப்புரை தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 10 (1) ஆம் உப பிரிவின் பிரகாரம் இந்த அறிக்கை பாராளுமன்றத்திற்கும் அறிக்கையின் பிரதி 1987 இன் 42 ஆம் இலக்க மாகாண சபைகள் அதிகாரச் சட்டத்தின் 23(2) ஆம் பிரிவின் பிரகாரம் மாகாண சபையிலும் முன்வைப்பதற்காக ஆளுனருக்குச் சமர்ப்பிக்கப்படும்.

எனது அறிக்கையின் முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படைப் பகுதியில் விபரிக்கப்பட்டுள்ள விடயங்களிலிருந்தான தாக்கத்தைத் தவிர்த்து நிதிக்கூற்றுக்கள் 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறு ஊவா மாகாண சபையின் நிதிநிலைமை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச்செயலாற்றல் மற்றும் காசுப்பாய்ச்சல் என்பன பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களுக்கு இணங்க உண்மையானதும் நியாயமானதுமான நிலைமையை பிரதிபலிக்கின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

## 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|---|
| (அ) | ஊவா மாகாண சபைக்கு எதிராக தொடுக்கப்பட்டுள்ள 08 வழக்குகளை இனங்கண்டு இலங்கை பொதுத் துறை கணக்கீட்டு நியமம் இலக்கம் 8 இன் பிரகாரம் நிதிக்கூற்றுக்களில் வெளிப்படுத்தப்பட்டிருக்கவில்லை. | மாகாண சபைக்கு எதிராக தொடுக்கப்பட்டுள்ள வழக்குகள் சம்பந்தமாக மாகாண சபை நிதியத்திலிருந்து உறுதியாக செலுத்த வேண்டிய பிற்போட்ட பொறுப்புக்களை இனங்காணல் இடம்பெறாததனால் மாகாண சபை நிதியத்தில் வெளிப்படுத்தல் | இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமம் இலக்கம் 8 இன் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | | இடம்பெற்றிருக்கவில்லை. எதிர்காலத்தில் அவ்வாறான நிச்சயத் தன்மைகளை உறுதிப்படுத்திய பின்னர் வெளிப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | |
| (ஆ) | 2022 ஆம் ஆண்டில் 05 வணிக முற்பணக் கணக்குகள் தொடர்பாக உழைக்கப்பட்ட மொத்தமாக ரூபா 41,689,849 இலாபம் மாகாண நிதி விதி 510.2(ஆ) இன் பிரகாரம் மாகாண சபை வருமானத்திற்கு செலவு வைக்கப்படவில்லை. | அடுத்துவரும் ஆண்டிற்கான உற்பத்தி நடவடிக்கைகளுக்காக மூலப்பொருட்களை கொள்வனவு செய்தல், தொழிலாளர் சம்பளங்களைச் செலுத்துதல் என்பவற்றிற்காக போதிய காசு மீதியினை நிறுத்திவைக்க வேண்டியிருந்ததனால் இலாபம் மாகாண நிதியத்திற்கு செலவுவைக்கப்படவில்லை. கிடைக்கின்ற காசுப் பாய்ச்சலினை கவனத்தில் கொண்டு இலாபத்தை மாகாண சபை நிதியத்திற்கு செலவு வைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் உரிய ஆண்டிற்கான இலாபத்தில் ஒக்கம்பிடிய விதைப் பண்ணையிலிருந்து ரூபா 15 மில்லியனும் இயந்திரப் பொறியியல் அலுவலகத்திலிருந்து ரூபா 1 மில்லியனும் அச்சகத்திலிருந்து ரூபா 3 மில்லியனும் 2023-04-11 ஆந் திகதியளவில் மாகாண சபை நிதியத்திற்கு செலவு வைக்கப்பட்டுள்ளது. | மாகாண சபை நிதி விதி 510.2(ஆ) இன் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (இ) | 03 வணிக முற்பணக் கணக்குகள் தொடர்பாக 2022 ஆம் ஆண்டிற்காக ஒதுக்கீடு செய்யப்பட்ட ரூபா 19,884,214 தொகையான நிலையான சொத்துக்களின் பெறுமானத் தேய்வு மாகாண நிதி விதி 509.1 இன் பிரகாரம் மாகாண திறைசேரியின் பெறுமானத் தேய்வு ஒதுக்க நிதியத்திற்கு செலவு வைக்கப்பட்டிருக்கவில்லை. | உரிய வணிக முற்பணக் கணக்குகளில் பெறுமானத் தேய்விற்கான செம்மையாக்கல் மேற்கொள்ளப்பட்டிருந்தும் நிதி விதியின் பிரகாரம் அது தொடர்பான பெறுமானத் தேய்வு ஒதுக்கமாக மாகாண நிதியத்திற்கு செலவு வைக்கப்பட வேண்டிய போதிலும் காசு ரீதியாக கணக்குகளில் இல்லாததனால் | மாகாண சபை நிதி விதி 509.1 இன் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | | மாகாண சபை நிதியத்திற்கு அனுப்புவதற்கு நடவடிக்கை எடுக்குமாறு தெரியப்படுத்தப்பட்டுள்ளதுடன் 05 முற்பணக் கணக்குகளின் பெறுமானத் தேய்வு ஒதுக்கம் தொடர்பான பணம் ரூபா 3,093,628 தற்பொழுது மாகண சபை நிதியத்திற்கு செலவு வைக்கப்பட்டுள்ளது. | |
| (ஈ) | ஒன்றித்த நிதிக்கூற்றுக்களின் நிதி நிலைமை தொடர்பான கூற்றில் 2022 திசெம்பர் 31 ஆந் திகதியில் சமர்ப்பித்திருந்த ரூபா 1,894,574 தொகையான முற்கொடுப்பனவு மீதியில் ரூபா 521,967 மிகையாகக் காட்டப்பட்டிருந்தமையின் காரணமாக அப்பெறுமதியால் மீளாய்வாண்டிற்கான நடைமுறைச் சொத்துக்கள், மொத்த மீண்டு வரும் செலவுகள், பற்றாக்குறை என்பன மிகையாக கணிக்கப்பட்டிருந்தது. | பிரதிப் பிரதம செயலாளர் (நிருவாகம்) அலுவலகத்தின் மூலம் முற்கொடுப்பனவுகளை கணித்து அறிக்கையிடும் போது தவறு இடம்பெற்றுள்ளதுடன் இம் மீதியின் காரணமாக இடம்பெறும் தாக்கத்தை அடுத்துவரும் ஆண்டின் போது சரிசெய்வதற்கு நடவடிக்கை எடுப்பேன். | முற்கொடுப்பனவு மீதியினை நிதிக்கூற்றுக்களில் சரியாகக் காட:டுதல் வேண்டும். |
| (உ) | 05 ஆண்டுகளுக்கு மேற்பட்ட காலத்திலிருந்து 2021 திசெம்பர் 31 ஆந் திகதி வரை ஒன்றித்த நிதி நிலைமைக் கூற்றில் அதிகாரம்பெற்ற முற்பணக் கணக்கு நடவடிக்கைகளிலிருந்து கிடைக்க வேண்டியதாகக் காட்டப்பட்டிருந்த ரூபா 4,816,374 மீதி மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்றில் கைத்தொழில் அபிவிருத்தி திணைக்களம் தீர்த்துவைக்காத கட்டுநிதி மீதியாக காட்டப்பட்டிருந்தும் அந்த நிறுவனத்தின் ஏடுகள் மற்றும் ஆவணங்களின் பிரகாரம் அவ்வாறான ஒரு மீதி இருக்கவில்லை. | 2022-12-31 ஆந் திகதியில் உள்ளவாறு அதிகாரம் பெற்ற முற்பணக் கணக்கு நடவடிக்கைகளிலிருந்து கிடைக்க வேண்டிய கணக்காக குறிப்பிடப்பட்ட மீதியானது கைத்தொழில் அபிவிருத்தி திணைக்களத்தின் தீர்த்துவைக்கப்படாத கட்டுநிதிக் கணக்கிற்கு நாட்கறிப்பு பதிவின் மூலம் மாற்றப்பட்டுள்ளது. அதற்கிணங்க உரிய நிறுவனம் இது சம்பந்தமாக தெரியப்படுத்தப்பட்டிருந்ததுடன் அந்த மீதியில் அந்த நிறுவனத்தின் திரண்ட நிதியத்தின் மூலம் செம்மையாக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு உரிய பணத்தை மாகாண சபை நிதியத்திற்கு அனுப்புமாறு அறிவுறத்தல் | ஒன்றித்த நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்ட தகவல்கள் வணிக முற்பணக் கணக்குகளில் உள்ளடக்கப்பட்ட தகவல்களுடன் இணங்கியிருத்தல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | | வழங்கப்பட்டுள்ளது. அதற்கிணங்க ரூபா 4,816,374 தொகையான இப்பணத்தில் ரூபா 4,550,955 பணம் 2023-05-16 ஆந் திகதி கிடைத்துள்ளது. | |
| (ஊ) | 2022 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறு ஒன்றித்த நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்ட 10 நிறுவனங்களின் அட்டுறு செலவுகள் அந்த நிறுவனங்களினால் சமர்ப்பித்திருந்த ஒதுக்கீட்டு கணக்குகளின் பொறுப்புக்கள் பெறுமதியுடன் ரூபா 96,708,302 ஆல் வேறுபட்டிருந்தது. | இந்த ஒவ்வொரு கணக்கின் ஒதுக்கீட்டுக் கணக்குகளிலிருந்து செய்யப்பட்ட அறிக்கையிடலுக்கு இணங்க அதன் மூலம் இடம்பெற்றுள்ள தாக்கத்தை அடுத்துவரும் ஆண்டின் போது சரிசெய்வதற்கு குறித்துக் கொள்ளப்பட்டது. உரிய நிறுவனங்களிடமிருந்து இது தொடர்பான காரணத்தை விசாரித்தல் இடம்பெற்றுள்ளது. அடுத்துவரும் ஆண்டின் போது மாகாண திறைசேரியினால் பரீட்சித்ததன் பின்னர் மாத்திரம் கணக்காய்விற்கு கணக்குளைச் சமர்ப்பிப்பதற்கு குறித்துக்கொள்ளப்பட்டது. | ஒன்றித்த நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்ட தகவல்கள் நிறுவனங்கள் தொடர்பான ஒதுக்கீட்டுக் கணக்கில் உள்ளடக்கப்பட்ட தகவல்களுடன் இணங்கியிருத்தல் வேண்டும். |
| (எ) | ஊவா மாகாண விவசாயத் திணைக்களத்தின் ஒதுக்கீட்டுக் கணக்கின் பிரகாரம் பொது வைப்புக் கணக்கின் மீதி ஒன்றித்த நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் அது தொடர்பாக சமர்ப்பிக்கப்பட்ட மீதியுடன் ரூபா 74,411,154 ஆல் வேறுபட்டிருந்தது. | ஒன்றித்த நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்ட தொகை சரியானதாகும். ஒதுக்கீட்டுக் கணக்கில் தகவல்களைக் காட்டும் போது பிழையான தகவல்களை சமர்ப்பித்தல் இடம்பெற்றுள்ளது. எதிர்காலத்தில் ஒதுக்கீட்டுக் கணக்கின் பிழையை சரிசெய்வதற்காக ஆலோசனை வழங்கப்பட்டுள்ளது. | ஒன்றித்த நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்ட தகவல்கள் நிறுவனங்களுக்குரிய ஒதுக்கீட்டுக் கணக்கில் உள்ளடக்கப்பட்ட தகவல்களுடன் இணங்கியிருத்தல் வேண்டும். |

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். இந் நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக எனது பொறுப்பு கணக்காய்வாளரின் பொறுப்பு என்ற பிரிவில் மேலும் விபரிக்கப்பட்டுள்ளது. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

## 1.3 நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக முகாமைத்துவத்தின் பொறுப்பு

இந்நிதிக்கூற்றுக்களை பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு கோட்பாடுகளுக்கு அமைவாக உண்மையான மற்றும் நியாயமான நிலைமையை பிரதிபலிக்கும் வகையில் தயாரித்தல், மோசடிகள் மற்றும் தவறுகள் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிரழ்கூற்றுக்கள் இன்றிய நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடிய வகையில் தேவையான உள்ளகக் கட்டுப்பாட்டினை தீர்மானித்தல் முகாமைத்துவத்தின் பொறுப்பாகும்.

மாகாண சபையின் நிதி அறிக்கையிடல் நடைமுறை சம்பந்தமான பொறுப்பு மாகாண திறைசேரியினை உள்ளடக்கி ஒவ்வொரு நிறுவனத்தின் முகாமைத்துவத்தினால் வகிக்கப்படும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 16 (1) ஆம் உப பிரிவின் பிரகாரம் ஊவா மாகாண சபையினால் வருடாந்த மற்றும் உரிய நேரத்தில் நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடிய வகையில் தனது வருமானங்கள் செலவினங்கள் சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பாக உரிய வகையில் ஏடுகள் மற்றும் அறிக்கைகளைப் பேணுதல் வேண்டும்.

## 1.4 நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு தொடர்பாக கணக்காய்வாளரிள் பொறுப்பு

ஒட்டுமொத்தமாக நிதிக்கூற்றுக்கள் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிரழ்கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தல் ஒன்றை பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வு அறிக்கை வழங்குவதே எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர்மட்டத்திலான உறுதிப்படுத்தல் ஒன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தல் ஒன்றல்ல மோசடிகள் மற்றும் தவறுகள் தனியாகவோ அல்லது கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்கக் கூடியதாக இருப்பதுடன் அதன் பொருண்மையான தன்மையானது இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் பொருளாதார தீர்மானங்கள் தொடர்பாக ஏற்படும் தாக்கத்தின் அடிப்படையில் தங்கியுள்ளது.

இலங்கைக் கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் ஒரு பகுதியாக என்னால் தொழில்சார் தீர்ப்புக்கள் மற்றும் தொழில்சார் ஐயப்பாடுகளுடன் கணக்காய்வு செய்யப்பட்டன. என்னால் மேலும்,

- வெளிப்படுத்தப்பட்ட கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படையினை வழங்கும் போது அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களில் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தினை இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போதும் சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய ஆபத்துக்களை தவிர்த்துக் கொள்வதற்கும் போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிராயத்திற்கு அடிப்படையாகும் பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன் தவறான கூட்டிணைவு தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டு விடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடும் பொருட்டு உள்ளகக் கட்டுப்பாட்டின் ஆக்கபூர்வமான தன்மை தொடர்பாக அபிப்பிராயமொன்றை தெரிவிப்பதற்கு கருத்து தெரிவிக்கவில்லை.
- கணக்கீட்டு கொள்கையின் பொருத்தப்பாடுகளையும் கணக்கீட்டு நியாயத் தன்மையினையும் மற்றும் முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களின் பொருத்தமான தன்மையை மதிப்பீடு செய்தல்.
- நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்காக அடிப்படையாக கொள்ளப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்கள் பொருத்தமான மற்றும் நியாயமான முறையில் நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளமையை மதிப்பாய்வு செய்தல்.

எனது கணக்காய்வில் இனங்காணபட்பட்ட முக்கியமான கணக்காய்வு கண்டுபிடிப்புக்கள் பிரதான உள்ளகக் கட்டுப்பாட்டு பலவீனங்கள் மற்றும் ஏனைய விடயங்கள் தொடர்பாக முகாமைத்துவத்திற்கு தெரியப்பத்தப்பட்டது.

## 1.5 நிதிக்கூற்றுக்கள் தொடர்பான கருத்துரைகள்

### 1.5.1 தலைப்பு 700 – ஆளுனர் அலுவலகம்

**முகாமைத்துவ செயற்திறனின்மைகள்**

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|
| ஊவா மாகாணத்தின் ஆளனருக்கு ஒரு மேலதிக வீடாக பிரதம அமைச்சின் உத்தியோகபூர்வ இல்லம் வழங்கப்பட்டிருந்ததுடன் வாடகை அறவிடப்படாது ஆளனரின் பதவியினர்களுக்காக பயன்படுத்துவதற்கு வழங்கப்பட்டிருந்தது. அதற்காக 2021 சனவரியிலிருந்து 2022 ஒக்தோபர் வரையான காலம் தொடர்பாக அந்த பதவியணியினர்களினால் செலுத்த வேண்டிய ரூபா 314,761 தொகையான நீர்ப் பட்டியல் மற்றும் மின்சாரப் பட்டியல் செலவுகள் ஊவா மாகாணசபை நிதியத்திலிருந்து செலுத்தப்பட்டிருந்தது. | பிரதம அமைச்சுக்கு ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ள உத்தியோகபூர்வ இல்லமானது அதற்குச் சமமான தரத்திலுள்ள ஏனைய நபர்கள் இல்லாததனால் மற்றும் இந்த உத்தியோகபூர்வ இல்லம் முறையான பராமரிப்புடன் பேணப்பட வேண்டியிருந்ததனால் மேற்கூறிய தேவைப்பாட்டினைக் கருத்தில் கொண்டு ஆளுனருக்கு தற்காலிக பயன்பாட்டிற்காக ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. | பிரதம அமைச்சின் உத்தியோகபுர்வ இல்லத்தினை பயன்படுததுவதற்காக வீட்டு வாடகை அறவிட வேண்டியதுடன் மின்சாரம் மற்றும் நீர்ப்பட்டியல்களை தீர்த்துவைப்பதற்காக மாகாண சபை நிதியத்திலிருந்து மேற்கொள்ளப்பட்ட செலவுகளை வீட்டை பயன்படுத்திய பதவியினர்களிடமிருந்து மீள அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

### 1.5.2 தலைப்பு 701 – சபை செயலாளர் அலுவலகம்

#### (அ) இணக்கமின்மைகள்

**சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் என்பவற்றுடனான இணக்கமீன்மைகள்**

| சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் என்பவற்றுக்கான தொடர்பு | இணக்கமின்மைகள் | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|---|
| **முகாமைத்துவ சேவைகள் சுற்றிக்கை** | | | |
| 03/2018 ஆம் இலக்க 2018 யூலை 18 ஆந் திகதிய முகாமைத்துவ சேவைகள் சுற்றிக்கையின் II ஆம் பந்தி | பொதுத்துறைசேரியின் முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தின் முன் அங்கீகாரத்தினைப் பெற்றுக்கொள்ளாது தனது நிறுவனங்களின் பதவியணியினர்களுக்கு செலுத்தப்படுகின்ற படிகளைத் தீர்மானிப்பதனை தவிர்த்துக்கொள்ள வேண்டுமெனக் காட்டப்பட்டிருந்தும் ஊவா மாகாண சபையின் சபை செயலாளர் அலுவலகத்தின் 28 உத்தியோகத்தர்களுக்கு 2022 சனவரி 01 ஆந் திகதியிலிருந்து 2022 யூன் 30 ஆந் வரை அவர்களின் தொடக்க சம்பளத்தில் 25 சதவீதமான வகையில் ரூபா 1,505,817 விசேட படி செலுத்தப்பட்டிருந்தது. | ஊவா மாகாண சபையின் 2017 இன் 03 ஆம் இலக்க நியதிச் சட்டத்தின் பிரகாரம் இப்படிகள் செலுத்தப்பட்டன. மாகாண சபை செயற்திறனாக அமுல்ப்படுத்தப்படாததனால் தற்பொழுது இந்த படிகளை தற்காலிகமாக நிறுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்தும் உரிய நியதிச்சட்டம் தொடர்ந்தும் அமுல்ப்படுத்தப்பட்டு வருகின்றது. 2023-05-09 ஆந் திகதி நடைபெற்ற அரசாங்க கணக்குகள் குழுக் கூட்டத்தின் போது இது சம்பந்தமாக காணப்பட்ட சட்டரீதியான அதிகாரத்தை பரீட்சிப்பதற்காக மாகாண சபை மற்றும் உள்ளூராட்சி அமைச்சிற்கு அரசாங்க கணக்குகள் குழுவினால் பணிப்புரை வழங்கப்பட்டுள்ளது. | 2018 யூலை 18 ஆந் திகதிய 03/2018 ஆம் இலக்க முகாமைத்துவ சேவைகள் சுற்றறிக்கையின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

#### (ஆ) சிக்கனமற்ற கொடுக்கல் வாங்கல்கள்

| | | |
|---|---|---|
| ஊவா மாகாண சபையின் 6 ஆவது உத்தியோகபூர்வ காலம் முடிவடைந்ததன் பின்னர் பெயரளவுப் பதவியான | மாகாண சபையின் உத்தியோகபூர்வ காலம் முடிவடைந்ததன் பின்னர் அடுத்த சபை கூட்டப்படும் வரை | மாகாண சபை கலைக்கப்பட்டுள்ள சந்தர்ப்பத்தில் தலைவரின் |

| | | |
|---|---|---|
| தலைவரின் தனிப்பட்ட பதவியணியிலுள்ள 11 உத்தியோகத்தர்களுக்காக 2022 சனவரி 01 ஆந் திகதியிலிருந்து 2022 யூலை 31 ஆந் திகதி வரை ஊவா மாகாண சபைக்கு எதுவித சேவையும் பெற்றுக்கொள்ளாது சம்பளமும் படிகளுமாக ரூபா 4,170,265 தொகை செலுத்தப்பட்டிருந்தது. | தலைவர் பதவி காணப்படும். சனாதிபதியின் செயலாளரினால் வழங்கப்பட்ட பீஎஸ்/சீஎஸ்ஏ/11-18(ii) ஆம் இலக்க தலைவரின் சுற்றிக்கையின் மூலம் தலைவரின் தனிப்பட்ட பதவியணியினருக்காக 02 சாரதிகளுக்கு தகமையுள்ளது என தெரியப்படுத்தப்பட்டுள்ளதுடன் சனாதிபதியின் செயலாளரால் வழங்கப்பட்ட பீஎஸ்/சீஎஸ்ஏ/11-18 (ii) ஆம் இலக்க 2022 ஒக்தோபர் 18 ஆந் திகதிய சுற்றறிக்கையின் பிரகாரம் ஒரு பிரதியோக செயலாளர், இரண்டு முகாமைத்துவ உதவியாளர்கள், ஒரு அலுவலக உதவியாளர் ஒரு சாரதி என்பனவாக பதவியணியினர் நியமிக்கப்பட்டிருந்தனர். தற்பொழுது இச்சுற்றறிக்கையின் பிரகாரம் அங்கீகரித்த பதவியணியினர்களுக்கு மத்திரம் சம்பளங்களையும் படிகளையும் செலுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. | தனிப்பட்ட ஆளணியினர்களுக்காக செலுத்தப்பட்ட பணத்தை மீண்டும் அறவீடு செய்தல் வேண்டும். |

**1.5.3 தலைப்பு 705 – விளையாட்டுக்களும் இளைஞர் விவகாரமும் சுற்றுலா, போக்குவரத்து, கலாச்சாரம் மற்றும் ஆடைத் தொழிலும் சிறிய கைத்தொழில்களும் அமைச்சு**

**(அ) முகாமைத்துவ செயற்திறனின்மைகள்**

| **கணக்காய்வு அவதானிப்புக்கள்** | **பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள்** | **சிபாரிசுகள்** |
|---|---|---|
| ஊவா மாகாண சுற்றுலா மேம்பாட்டு பிரிவினால் 2013, 2014 மற்றும் 2020 ஆம் ஆண்டுகளின் போது சுற்றுலா மேம்பாட்டினை குறிக்கோளாகக் கொண்டு ரூபா 3,581,500 தொகையான அச்சிடப்பட்ட புத்தகங்களில் 2022 செப்தெம்பர் மாதம் வரை ரூபா 2,847,825 கிரயமான 3930 புத்தகங்கள் உரிய குறிக்கோளை நிறைவேற்றுவதற்காக ஈடுபடுத்தப்படாது களஞ்சியங்களில் விளைவற்றுக் காணப்பட்டன. | இப்புத்தகங்களை அச்சிடும் போது அச்சிடல் நலன்களைப் பெற்றுக்கொள்ளும் குறிக்கோளில் ஒரே தடவையில் எதிர்கால தேவைப்பாட்டினையும் கருத்தில் கொண்டு அச்சிடல் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்ட போதிலும் இவற்றினை ஒரே தடவையில் பயன்பாட்டிற்கு எடுத்துக்கொள்ளாது சந்தர்ப்பத்திற்கு ஏற்ற வகையில் பயன்பாட்டிற்கு எடுத்துக்கொள்ளல் இடம்பெறும். | எதிர்பார்த்த குறிக்கோளை நிறைவேற்றுவதற்காக நடவடிக்கை எடுக்க வேண்டியதுடன் இப்புத்தகங்கள் அழிவடைவதனை தவிர்ப்பதற்கும் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | |
|---|---|---|
| | அந்த புத்தகங்களில் Resplendent Uva, visit Uva Sri Lanka. கந்துகர பராதீசய ஆகிய புத்தகங்கள் மத்திய கலாச்சார நிதியத்தின் வெளியீட்டு சந்தைப்படுத்தல் நிதியத்தின் மூலம் முறைப்படியாக விற்பனை செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதுடன் இணையதளம் மற்றும் டிஜிடல் தொலைநகல்களினூடாக விற்பனை செய்வதற்கும் சுற்றுலா முகவர் நிறுவனங்கள் மற்றும் இராஜாங்க முகவர்களின் மூலம் இப்புத்தகங்களை வழங்குவதற்குப் போதுமான அளவில் மேற்கொள்ளப்பட்டது. மேலும் மஹியங்கனை சுற்றுலா நிலையம் மற்றும் எல்ல சுற்றுலா தகவல் நிலையத்தில் முறையான நடைமுறை தயாரிக்கப்பட்டு இப்புத்தகங்களை சற்றுலா மேம்பாட்டிற்காக ஈடுபடுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. | |

**(ஆ) சிக்கனமற்ற கொடுக்கல் வாங்கல்கள்**

| | | |
|---|---|---|
| சாத்தியவள ஆய்வினை மேற்கொள்ளாது 2013 ஆம் ஆண்டின் போது நிர்மாண வேலைகள் ஆரம்பிக்கப்பட்ட உடவளவ சுற்றுலா ஓய்வகத்திற்கு 2022 ஆம் ஆண்டளவில் ஊவா மாகாண சபையின் மூலம் ரூபா 40,918,644 செலவு செய்யப்பட்டிருந்தும் 2022 ஆகஸ்ட் மாதமளவில் இந்த ஓய்வகமும் கடைகளும் சுற்றலாதாரர்களுக்காக திறக்கப்படாததன் அடிப்படையில் செலவு செய்யப்பட்ட பணத்திலிருந்து மாகாண சபைக்கு இதுவரை வருமானத்தை உழைக்க முடியாதிருந்தது. | இந்த நிலையத்தினை உள்நாட்டு வெளிநாட்டு சுற்றுலாதாரர்களுக்கு ஒரு சேவையினை வழங்குவதற்காக 2023-04-11 அந் திகதி உரிய தரப்பினர்களுக்கு முறைப்படியாக உடன்படிக்கை செய்து ஒப்படைக்கப்பட்டிருந்ததுடன் அதற்கிணங்க உரிய தரப்பினர்களால் அந்த சேவையை வெற்றிகரமாக அமுல்ப்படுத்துவதற்காக முறைப்படியாக நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றத. | செயற்திட்டத்தினை அமுல்ப்படுத்தி மாகாண சபைக்கு வருமானத்தை உழைப்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

**1.5.4 தலைப்பு – 706 விவசாயம், நீர்ப்பாசம், கால்நடை உற்பத்தி, மீன் பிடி நடவடிக்கைகள் அமைச்சு**

**முகாமைத்துவ செயற்திறனின்மைகள்**

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|
| 20 ஆண்டுகளுக்கு மேற்பட்ட காலமாக மாகாண சபை நிதிக்கூற்றுக்களில் சொத்துக்களாகக் காட்டப்படுகின்ற விதை உருளைக் கிழங்கு விசேட முற்பணக் கணக்கின் வரவு மீதி மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறு ரூபா 9,674,749 ஆக இருந்ததுடன் இந்த மீதியானது கடன் அடிப்படையில் விதை உருளைக் கிழங்குகளைப் பெற்ற 387 உத்தியோகத்தர்களிடமிருந்து மாதாந்தம் அறவிடப்பட வேண்டியிருந்தது. மீளாய்வாண்டில் 34 உத்தியோகத்தர்களிடமிருந்து ரூபா 323,500 மாத்திரம் அறவிடப்பட்டு அக்கடன் முறைப்படியாக அறவிடப்பட்டிருக்கவில்லை என்பது அவதானிக்கப்பட்டது. | இக்கடன் பணத்தை அறவீடு செய்வதற்காக பல்வேறு நடைமுறைகள் பின்பற்றப்பட்டு வருவதுடன் உரிய கடன் மீதியை அறவிட்டு அனுப்பிவைக்குமாறு உரிய நிறுவனத் தலைவர்களுக்கு தெரியப்படுத்தப்பட்டுள்ளது. | கடன் மீதியை உரிய காலத்தில் அறவீடு செயவ்தற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

**1.5.5 தலைப்பு – 709 பிரதிப் பிரதம செயலாளர் (ஆளணியும் பயிற்சியும்) அலுவலகம்**

**ஆளணி நிருவாகம்**

**(அ) மாகாண சபை அமைச்சுக்கள்/ திணைக்களங்கள் மற்றும் அலுவலகங்கள்**

**(பாடசாலைகள் மற்றும் சுகாதார ஆளணியை தவிர்த்து)**

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|
| மீளாய்வாண்டின் இறுதியில் 487 உத்தியோகத்தர்களும் ஏனைய (அமையம்/ தற்காலிகம்/ஒப்பந்த அடிப்படை) 64 உழியர்களும் மிகையாக சேவையில் ஈடுபடுத்தப்பட்டிருந்தனர். சிரேஷ்ட மூன்றாம் மற்றும் ஆரம்ப மட்டங்களில் வெற்றிடங்களின் எண்ணிக்கை 703 ஆகும். | மிகையாகக் காணப்படுகின்ற இரண்டாம் மட்ட பதவியணியினருக்குள் தேசிய கொள்கைகளுக்கு இணங்க ஆட்சேர்ப்புச் செய்யப்பட்ட அபிவிருத்தி உத்தியோகத்தர்களும் உள்ளடக்கப்பட்டுள்ளனர. | பதவியணியினை சமமாக பேணுவதற்கு முயற்சி எடுத்தல் வேண்:டும். |

**(ஆ) பாடசாலை ஆளணியினர்**

| | | |
|---|---|---|
| மீளாய்வாண்டின் இறுதியில் ஆசிரியர் சேவைக்காக 591 ஆசிரியர்களும் உதவி பதவியனருக்காக 1632 நபர்களும் ஏனைய (அமையம்/ தற்காலிகம்/ ஒப்பந்த அடிப்படை) 11 ஊழியர்களும் சேவையில் ஈடுபடுத்தப்பட்டனர. அதிபர் சேவையில் 409 பதவிகள் வெற்றிடமாகக் காணப்பட்டன. | அங்கீகரித்த ஆசிரியர்களின் எண்ணிக்கை 17026 ஆகும். முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தினால் வழங்கப்பட்ட தகவல்களில் உள்ளடக்கப்பட்ட 642 பதவியணியினர்கள் இதனுள் சேர்க்கப்பட வேண்டியுள்ளதனால் மிகையாக ஆசிரிய பதவியணியினர்கள் காணப்படவில்லை என குறிப்பிடுகிறேன். அவ்வாறே உதவி பதவியணியில் மிகையாக பதவியணியினர் காணப்படுவதானது தேசிய கொள்கைக்கு இணங்க சேர்த்துக் கொள்ளப்பட்ட அபிவிருத்தி உத்தியோகத்தர்களாகும். | ஆசிரியர்கள் மற்றும் அதிபர்களில் சமநிலை பேணுவதற்கு முயற்சி எடுத்தல் வேண்டும். |

**(இ) சுகாதார பதவியணியினர்**

| | | |
|---|---|---|
| சுகாதார பதவியணியில் சிரேஷ்ட, மூன்றாம், இரண்டாம் மற்றும் ஆரம்ப மட்டங்களில் வெற்றிடங்களின் எண்ணிக்கை 1007 ஆகக் காணப்பட்டதுடன் அந்த வெற்றிடங்களை நிரப்புவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | சுகாதாப் பதவியணியில் சிரேஷ்ட, மூன்றாம், இரண்டாம் மட்டங்களில் வெற்றிடங்களின் எண்ணிக்கை 994 ஆக இருந்ததுடன் மிகைப் பதவியணியினர் 124 ஆகும் | பதவியணியினரை சமமாகப் பேணுதல் வேண்டும். |

## 1.5.6 தலைப்பு 710- சுகாதார சேவைத் திணைக்களம்

**(அ) சொத்துக்கள் முகாமைத்துவம்**

**பராமரிப்பு மற்றும் திருத்த வேலைகள் மேற்கொள்ளப்படாமை**

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|---|
| (i) | 2016 இலிருந்து 2021 வரையான காலப்பகுதியில் பிராந்திய சுகாதார பணிப்பாளர் அலுவலகத்தின் 05 வாகனங்கள் | இந்த வாகனங்கள் விபத்திற்கு உள்ளாகியுள்ளதுடன் தற்பொழுது | நீண்ட காலமாக பழுதுபார்த்தல் நடவடிக்கைகளுக் காக தனியார் |

| | | | |
|---|---|---|---|
| | பழுது பார்த்தல் நடவடிக்கைகளுக்காக தனியார் நிறுவனங்களுக்கு ஒப்படைக்கப்பட்டிருந்த போதிலும் 2022 திசெம்பர் 31 வரை அந்த வாகனங்களை பழுதுபார்த்து மீண்டும் பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் அலுவலகத்திற்கு பெற்றுக்கொள்ளப்பட்டிருக்கவில்லை. | பழுதுபார்த்தல் நடவடிக்கைகளுக்காக அனுப்பிவைக்கப்பட்டு மேலதிக நடவடிக்கைகள் இடம்பெற்று வருகின்றன. | நிறுவனங்களுக்கு ஒப்படைக்கப்பட்டுள்ள வாகனங்களை துரிதமாக பழுதுபார்த்து மீண்டும் நிறுவனத்தினால் பெற்றுக்கொள்ளப்படுதல் வேண்டும். |
| (ii) | 2020 – 2022 காலப்பகுதியில் பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் அலுவலகத்திற்குரிய 09 வாகனங்களை பழுதுபார்க்கும் நடவடிக்கைக்காக கஹகொல்ல மாகாண இயந்திர பணிப்பாளர் அலுவலகத்திற்கு ஒப்படைக்கப்பட்டிருந்த போதிலும் 2022 திசெம்பர் 31 ஆந் திகதி வரை அந்த வாகனங்களை பழுதுபார்த்து மீண்டும் பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் அலுவலகத்தினால் பெற்றுக்கொள்ளப்பட்டிருக்கவில்லை. | வாகனங்களை பழுதுபார்ப்பதற்கு மாகாண பழுதுபார்த்தல் பிரிவிற்கு அனுப்பவைக்கப்பட்டுள்ளதுடன் வாகனங்களை பழுதுபார்த்தல் நடவடிக்கைகளை மேற்கொண்டு பயன்பாட்டிற்காக வழங்குவதற்க்கு அறிவுறுத்தல்கள் வழங்கப்பட்டுள்ளன. | வாகனங்களை பழுதுபார்க்கும் நடவடிக்கைகளை துரிதமாக மேற்கொண்டு பயன்பாட்டிற்கு எடுத்துக் கொள்ளுதல் வேண்டும். |

**(ஆ) பயன்படுத்தப்படாத மற்றும் குறைவாகப் பயன்படுத்தப்பட்ட சொத்துக்கள்**

| | | | |
|---|---|---|---|
| (i) | ஊவா மாகாண சுகாதார சேவைகள் திணைக்களத்தினால் மாகாண சபையின் நிதி ஏற்பாட்டின் அடிப்படையில் 2021 ஆம் ஆண்டின் போது ரூபா 4,021,483 செலவு செய்து பன்டாரவளை மாவட்ட வைத்தியசாலையில் மருத்துவ வாயு முறைமையை ஸ்தாபிக்கும் நடவடிக்கையானது 2021 ஆகஸ்ட் 17 ஆந் திகதியளவில் முடிவடைந்திருந்ததுடன் 2022 நவம்பர் 18 ஆந் திகதியளவில் இந்த முறைமை விளைவற்றுக் காணப்பட்டது. | கொவிட் நோற்றுநொய் நிலைமையானது தீவிர நிலையில் இருந்த சந்தர்ப்பத்தில் காணப்பட்ட அதிக ஆபத்தான நோயாளர்களுக்கு தேவையான ஒக்சிஜனை வழங்குதல் உயர்ந்த மட்டத்தில் காணப்பட்டது என சுகாதாரப்பிரிவினால் தெரிவிக்கப்பட்டதன் பின்னர் இவ்வாறு மருத்துவ வாயுமுறைமையை ஸ்தாபிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டது. சுகாதாரப் பிரிவினால் வழங்கிய அறிவுறுத்தல்களின் பிரகாரம் கொவிட் தோற்றுநோய் நிலைமை உயர்வாக இருந்த | சொத்துக்களை துரிதமாக பயன்பாட்டிற்கு எடுத்துக்கொள்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | | சந்தர்ப்பத்தில் பதுளை பொது வைத்தியாசலையில் காணப்பட்ட இயலளவைக் கட்டுப்படுத்தி நோயாளிகளுக்கு உச்ச அளவு சேவைகளை வழங்குவதற்காக இந்த மருத்துவ வாயு முறைமையை பயன்படுத்துதவற்குத் திட்டமிடப்பட்டிருந்தும் கொவிட் நோய் நிலைமையானது படிப்படியாக குறைவடைந்ததனால் எதிர்காலத்தில் மற்றைய நோயாளிகளுக்கு பயன்படுத்துவதற்குத் திட்டமிடப்பட்டுள்ளது. | |
| (ii) | மொனராகலை பிரந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் அலுவலகத்தில் மற்றும் பிராந்திய மருத்துவ வழங்கல் பிரிவில் மருந்து களஞ்சியத்திற்காக 2016 இலிருந்து 2019 வரையான காலப்பகுதியில் ரூபா 5,802,925 செலவு செய்து கொள்வனவு செய்யப்பட்ட 02 சூரிய சக்தி மின்சார முறைமைகள் 2022 திசெம்பர் 15 ஆந் திகதியளவில் செயற்பாடற்ற நிலையில் காணப்பட்டன. | ஒப்பந்த நிறுவனத்திற்குத் தெரியப்படுத்தப்பட்டுள்ளதுடன் எதிர்காலத்தில் அதனை நல்ல நிலைக்கு மற்றுவதற்கு உரிய நிறுவனத்துடன் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. | துரிதமாக நல்ல நிலைக்கு மாற்றி பயன்பாட்டிற்கு எடுத்துக்கொள்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

### 1.5.7 தலைப்பு 711- கல்வித் திணைக்களம்

**பாடசாலை பதவியணியினர்**

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|---|
| (i) | மஹியங்கனை கல்வி வலயத்திலுள்ள பாடசாலைகளில் 142 ஆசிரியர்களுக்கான பற்றாக்குறைகள் காணப்பட்டிருந்தும் அந்த கல்வி கல்வி வலயத்திலுள்ள பாடசாலைகளுக்கு | நாட்டில் காணப்பட்ட எரிபொருள் சிக்கலினை முன்னிட்டு அரசாங்கத்தின் மூலம் எடுக்கப்பட்ட தீர்மானத்திற்கு இணங்க உரிய ஆசிரியர்கள் தமது வீடுகளுக்கு | 142 பாடசாலை ஆசிரியர்களுக்கான பற்றக்குறைகள் காணப்பட்டிருந்தும் ஆசிரியர்களை சமப்படுத்துதலின் |

| | | | |
|---|---|---|---|
| | நியமங்களைப் பெற்ற 23 ஆசிரியர்கள் மொனராகலை மற்றும் வெலிமட வலயங்கள், மஹியங்கனைப் பிரிவு கல்வி அலுவலகம் ஆகிய நிறுவனங்களுக்கும் மற்றும் மஹியங்கனை கல்வி வலயத்திற்கு வெளியே வெளிபாடசாலைகளுக்கும் இணைத்துக்கொள்ளப்பட்டு 2022 மார்ச் மாதத்திலிருந்து ஒக்தோபர் மாதம் வரையான காலத்தில் சம்பளமாக ரூபா 2,717,137 செலுத்தப்பட்டிருந்தது. | அருகாமையில் காணப்படுகின்ற பாடசாலைகளுக்கு தற்காலிகமாக இணைத்துக்கொள்ளப்பட்டதுடன் தற்பொழுது உரிய இணைத்துக் கொள்ளல் காலம் முடிவடைந்து நிரந்தர சேவை நிலையங்களில் சேவையாற்றுவதற்கு சமூகமளித்துள்ளனர். மேலும் இக்காலத்தின் ஆசிரியர் வெற்றிடங்களை நிரப்புவதற்காக எதிர்காலத்தில் நடவடிக்கை எடுக்கப்படும். | மூலம் ஆசிரியர் பற்றாக்குறையை பூரணப்படுத்துவதற்கு பொறுப்புக்கூற வேண்டியவர்கள் கவனம் செலுத்துதல் வேண்டும். |
| (ii) | மஹியங்கனை கல்வி வலயத்தில் 2000- 2016 காலப்பகுதிக்காக ஆசிரியர் சேவை நியதிச்சட்டத்தில் உள்ளடக்கப்படாத 24 ஆசிரியர் ஆலோசகர்கள் நியமிக்கப்பட்டு 2020 சனவரி மாதத்திலிருந்து 2022 செப்தெம்பர் மாதம் வரையான காலப்பகுதிக்கு மொத்தமாக ரூபா 72,059,450 சம்பளமாகச் செலுத்தப்பட்டது. | தற்பொழுது ஆசிரிய ஆலோசகர்கள் சேவையின் சேவை நியதிச்சட்டம் அங்கீகரிக்கப்பட்டுள்ளதுடன் அங்கீகரித்த வெற்றிடங்களுக்காக தற்பொழுது சேவையில் ஈடுபட்டுள்ள ஆசிரிய ஆலோசகர்களை உள்ளிர்க்கும் நடவடிக்கை இடம்பெற்று வருகின்றது. | ஆசிரிய ஆலோசகர்கள் நிரந்தரமாக ஆட்சேர்க்கும் நடைமுறையின் அடிப்படையில் ஆட்சேர்க்கப்பட வேண்டியதுடன் ஆசிரியர்களை ஆசிரியர் பற்றாக்குறைக்கான பரிகாரத்தை ஈடுபடுத்துவதற்காக பயன்படுத்துதல் வேண்டும். |
| (iii) | மஹியங்கனை கல்வி வலயத்தில் பாடசாலை பதவியணியினர்களின் தகவல்களுக்கு இணங்க ஆய்வுகூட உதவியாளர்கள், பாடசாலை வேலையாள், சுகாதார ஊழியர்கள் ஆகிய 03 பதவித் தொகுதிகளைச் சார்ந்த 42 ஊழியர்கள் மிகையாகக் காணப்பட்டதுடன் அந்த மிகைப் பதவியணியினர்களுக்காக வலயக் கல்வி அலுவலகங்களினால் 2020, 2021 மற்றும் 2022 ஆம் ஆண்டுகளின் போது ரூபா 56,041,482 சம்பளம் செலுத்தப்பட்டிருந்தது. | இந்த ஊழியர்கள் தற்பொழுது பாடசாலைகளுக்கு இணைத்துக்கொள்ளப்பட்டு சேவையில் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர். எதிர்காலத்தில் மிகைப் பதவிகளுக்காக ஊழியர்கள் சேர்த்தக்கொள்ளப்படாது வெற்றிடங்கள் உருவாகியதன் அடிப்படையில் இந்த மிகை ஊழியர்களை புரணப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. | பதவியணியினை சமப்படுத்தி ஊழியர்களிடமிருந்து வினைத்திறனான மற்றும் ஆக்கபுர்வமான சேவைகளைப் பெற்றுக்கொள்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

**1.5.8 தலைப்பு 712- உள்ளூராட்சி திணைக்களம்**

**(அ) உள்ளூராட்சி அதிகார சபையை மேற்பார்வை செய்தல்**

**நிலுவையான வருமானங்கள்**

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|---|
| (i) | மீளய்வாண்டின் திசெம்பர் 31இல் உள்ளவாறு மீளாய்வாண்டிற்கும் முன்னைய ஆண்டிற்குமான ஊவா மாகாண சபையை நிருவகிக்கும் நிறுவனங்களுக்கு கிடைக்க வேண்டிய வீதவரி மற்றும் ஏனைய வருமானங்கள் ரூபா 889,963,278 அறவீடு செய்யப்பட்டிருக்கவில்லை . | 2023-03-31 இல் உள்ளவாறு ரூபா 345,408,534 தொகை இன்னும் அறவிட வேண்டியுள்ளது. | நிலுவை வருமானத்தை அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ii) | 1979 இன் 42 ஆம் இலக்க மாநகர சபைகள் மற்றும் நகரசபைகள் (திருத்திய) அதிகாரச் சட்டத்தின் மற்றும் 1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் அதிகாரச் சட்டத்தின் 129(2) ஆம் பிரிவிலுள்ள ஏற்பாடுகளின் பிரகாரம் உள்ளூராட்சி நிறுவனங்களால் அறிட வேண்ய நீதிமன்ற தண்டப் பணம் ரூபா 99,826,070 மற்றும் முத்திரைக் கட்டணம் ரூபா 193,145,930 உள்ளூராட்சி நிறுவனங்களுக்கு வழங்கப்பட்டிருக்கவில்லை. | உள்ளூாராட்சி நிறுவனங்கள் தொடர்பாக வேண்டப்பட்ட பணம் நீதிமன்ற தண்டப் பணம் மற்றம் முத்திரைக் கட்டணங்களை உரிய நிறுவனங்களுக்கு செலுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. | உள்ளூராடசி நிறுவனங்களுக்கு கிடைக்க வேண்டிய நீதிமன்ற தண்டப் பணம் மற்றும் முத்திரைக் கட்டணங்களை அந்த நிறுவனங்களுக்கு வழங்குவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

**(ஆ) வழங்கப்பட்டுள்ள மிகைக் கட்டண சான்றிதழ்களுக்காக அறவீடு செய்ய வேண்டியுள்ள பணம்**

| | | |
|---|---|---|
| மீளய்வாண்டின் திசெம்பர் 31இல் உள்ளவாறு ஊவா மாகாணத்தின் உள்ளூராட்சி அதிகார சபைகளின் உத்தியோகத்தர்களுக்கும் முகவர்களுக்கும் விதிக்கப்பட்ட 06 மிகைக் கட்டணங்கள் தொடர்பாக ரூபா 5,436,543 அறவீடு செய்யப்பட்டிருக்கவில்லை. | மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறு ரூபா 4,713,213 அறவிட வேண்டியிருந்தது. | மிகைக்க ட்டணங்களை அறவீடு செய்வதற்கு துரித நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

### 1.5.9 தலைப்பு 713 -கூட்டுறவ அபிவிருத்தி திணைக்களம்

**இணக்கமின்மைகள்**

**சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் என்பவற்றுடனான இணக்கமின்மைகள்**

| சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் என்பவற்றுடனான தொடர்பு | இணக்கமின்மைகள் | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|---|
| 2011 இன் 03 ஆம் இலக்க ஊவா மாகாண சபை கூட்டுறவுச் சங்க நியதிச் சட்டத்தின் 46 ஆம் பிரிவு நியதிச்சட்டம் தொடர்பான விதிக்கோவையின் 43 ஆம் விதியின் பிரகாரம் ஸ்தாபிக்கப்பட்டுள்ள ஊவா மாகாண கூட்டுறவு அபிவிருத்தி நிதிய நியதிச் சட்டத்தின் 10(1) ஆம் பிரிவு | கூட்டுறவு நிதிய நியதிச் சட்டத்தின் பொது நிபந்தனையின் பிரகாரம் கூட்டுறவு நிதியத்திற்கு பங்களிப்பு பணத்தை செலுத்த தவியுள்ள சங்கங்களுக்காக கடன்கள் அல்லது உதவிகள் வழங்கப்படாதிருக்க வேண்டிய போதிலும் பங்களிப்பு பணத்தை செலுத்த தவறிய 04 சங்கங்களுக்காக ரூபா 8,000,000 கடன் வழங்கப்பட்டிருந்தது. | கூட்டுறவு அபிவிருத்தி நிதியத்திற்கு சேர்ந்துள்ள பணத்தை நடைமுறைக் கணக்கு, நிலையான வைப்புக் கணக்கில் சேர்த்துவைப்பதனை விட சங்கங்களின் வியாபார நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கு போதிய நிதி வசதிகளை வழங்குவதனை குறிக்கோளாகக் கொண்டு கடன் பணம் விடுவிக்கப்பட்டுள்ளதுடன் கூட்டுறவு நிதியத்தினால் அறவிட வேண்டியுள்ள நிலுவையான பங்களிப்பு பணமும் அறவிடப்பட்டு வருவதுடன் தற்பொழுது 02 சங்கங்களினால் செலுத்த வேண்டிய கடன்பணம் முழுமையாக செலுத்தி முடிவுறுத்தப்பட்டுள்ளது. | ஊவா மாகாண கூட்டுறவு அபிவிருத்தி நிதியத்தின் நியதிச்சட்டத்திற்கு இணங்க நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

### 1.5.10 தலைப்பு 714 –விவசாய திணைக்களம்

**முகாமைத்துவ செயற்திறனின்மைகள்**

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|
| 10 ஆண்டுகளுக்கு முன்னர் விவசாயத் திணைக்களத்தில் இடம்பெற்ற ரூபா 440,990 சம்பள பணம் காணாமல் போன நிதி மோசடியானது 2022 திசெம்பர் 31 ஆந் திகதி வரையும் தீர்த்துவைக்கப்படவில்லை. | இதன் விசாரணை நடவடிக்கைகள் இன்னும் இடம்பெற்று வருவதுடன் இன்றுவரை அது சம்பந்தமாக இறுதித் தீர்மானம் | தீர்த்துவைக்கப்பட ாத மீதியினை பொறுப்புக்கூற வேண்டிய உத்தியோகத்தர்க ளிடமிருந்து |

| | | | |
|---|---|---|---|
| | | எடுக்கப்படவில்லை என குறிப்பிடப்பட்டுள்ளது. | துரிதமாக அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

**1.5.11 தலைப்பு 715 – கால்நடை உற்பத்தி மற்றும் சுகாதார திணைக்களம்**

**முகாமைத்துவ செயற்திறனின்மைகள்**

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|---|
| (i) | கிராமிய பொருளாதாரம் தொடர்பான அமைச்சினால் ரூபா 48 மில்லியன் செலவு செய்து அவுஸ்திரேலியாவிலிருந்து இறக்குமதி செய்யப்பட்ட உயர்ந்த வகையிலான 100 பசுக்கள் 2017 திசெம்பர் 24 ஆந் திகதி பொரலந்த அரசாங்க கால்நடை பண்ணைக்கு வழங்கப்பட்டிருந்தும் அந்த பசுக்களில் 32 பசுக்களும் அவற்றின் பிறந்த 119 கன்றுகளும் 2018 இலிருந்து 2022 ஆகஸ்ட் 15 ஆந் திகதிக்கிடையிலான காலத்தின் போது மரணமடைந்திருந்ததுடன் அதற்கு பண்ணை முகாமைத்துவத்தின் செயற்திறனின்மை காரணமாக இருந்தது. | ஒரு விசேட நாட்டிலிருந்து இறக்குமதி செய்யப்பட்ட இந்த மிருகங்கள் எமது நாட்டின் காலநிலை மற்றும் காலநிலைக்கு ஒத்திருக்காமையின் காரணமாக நோய் நிலைமைக்கு முகங் கொடுத்தமை, இலங்கையில் காணப்பட்ட நோய் நிலைமைக்கு தாக்குப்பிடிக்காமை நியமதரமுள்ள பசுக்கள் நிறுத்திவைக்கப்பட்டிருக்காமை, வெளிநாட்டு மிருகங்களுக்கு பொருத்தமான உணவுகள் இல்லாமை என்பவற்றினால் ஊட்டச்சத்து குறைபாடு உருவாகியமை முதலிய காரணங்களினால் மிருகங்கள் இறந்துள்ளன. | முறையான சாத்தியவள ஆய்வின்றி இக்கொள்வனவுகள் சம்பந்தமாக நடவடிக்கை எடுத்த உத்தியோகத்தர்களுக்கு எதிராக நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ii) | பொரலந்த அரசாங்க கால்நடை பண்ணையானது 220 ஏக்கர் அளவான காணி முழுவதும் பரவியுள்ளதுடன் அதில் 50 ஏக்கர்கள் புல் பயிர்ச் செய்கைக்காக ஈடுபடுத்தலாம் என்பது அவதானிக்கப்பட்டது. எவ்வாறாயினும் 2022 ஆம் ஆண்டளவில் 14 ஏக்கர்கள் மாத்திரம் புல் பயிர்ச் செய்கைக்காக ஈடுபடுத்தப்பட்டதன் | 2018 ஆம் ஆண்டில் புல் பயிர்ச் செய்கை ஆரம்பிக்கப்பட்டதுடன் அதுவரையும் பண்ணையை நிர்ணயித்தல், பட்டிகளைத் தயாரித்தல் போன்ற பண்ணையின் ஏனைய நடவடிக்கைகளுக்காகவும் பயன்படுத்துவதற்கு இருந்த ஒரே நீர் மூலம் | பண்ணை மிருகங்களுக்கு பண்ணையிலிருந்தே தேவையான புற்களை வழங்குவதற்காக ரூபா 4.1 மில்லியன் செலவு செய்யப்பட்டு நிறைவேற்றப்பட்ட |

| | | | |
|---|---|---|---|
| | காரணமாக பசுக்களின் உணவுக்காக பண்ணையினால் புல் வழங்குதல் மட்டுப்படுத்தப்பட்டிருந்தது. அவ்வாறே 2018 ஆம் ஆண்டின் போது மாகாண நிர்ணயிக்கப்பட்ட அபிவிருத்தி ஏற்பாட்டின் அடிப்படையில் புல் பயிர்ச் செய்கைக்காக நீர்க் குழாய்களைப் பதிப்பதற்காக முறையே ரூபா 2,071,407 மற்றும் ரூபா 2,031,291 தொகைகளாக மொத்தமாக ரூபா 4,102,698 செலவு செய்யப்பட்டிருந்தும் உரிய நடவடிக்கையானது தொடர்ச்சியாக வினைத்திறனாக அமுல்ப்படுத்தப்பட்டிருக்கவில்லை. | குளமாக இருந்ததுடன் அப்போது காணப்பட்ட வறண்ட கால நிலையுடன் குளத்தில் இருந்த நீரின் அளவு பண்ணையின் அனைத்து செயற்பாடுகளுக்கும் போதியதாக இல்லாததனால் புல் பயிர்ச் செய்கையை முறைப்படியாக பராமரித்தல் இடம்பெறவில்லை. எனினும் 2018 இல் ஆரம்பிக்கப்பட்ட புல் பயிர்ச் செய்கையில் குறித்த அளவானவை தற்பொழுது மிகுதியாகக் காணப்பட்டதுடன் அந்த புல்லை வெட்டி மிருகங்களுக்கு போடுதல் இடம்பெறுகின்றது. | செயற்திட்டத்தினூடாக மிருகங்களின் உணவுத் தேவைப்பாட்டினை அடைந்து கொள்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (iii) | உயர் வகையான இரட்டைக் கலவை பசுக்களை இனப்பெருக்கம் செய்து ஊவா மாகாணத்தில் பகிந்தளித்து அதன் மூலம் திரவப்பால் உற்பத்தியை அதிகரித்தல், பொரலந்த அரசாங்க கால்நடை பண்ணையை பராமரித்தலின் பிரதான குறிக்கோளாக இருந்த போதிலும் 2018 இலிருந்து 2022 ஆகஸ்ட் வரையான 05 ஆண்டுகளுக்கு அண்மித்த காலத்தில் பண்ணையின் மூலம் 20 வெஸ்ஸி பசுக் கன்றுகள் மாத்திரம் விவசாயிகளுக்கு விற்பனை செய்திருந்தமையின் காரணமாக அக்குறிக்கோள் நிறைவேற்றப்பட்டிருக்கவில்லை. | ஒரு வெளிநாட்டிலிருந்து இறக்குமதி செய்யப்பட்ட இம்மிருகங்கள் ஐரோப்பிய ஆரையுடனை உள்நாட்டு மிருகங்களின் மட்டதுக்கு மீள்சக்தி இல்லாமை மற்றும் நாட்டின் காலநிலை மற்றும் வானிலை நிலைமைகளுக்கு இணங்கியிருக்காமையின் காரணமாக குறிப்பிடத்தக்க அளவானவை மரணமடைந்து விட்டன. எனவே எதிர்பார்த்த மட்டத்திற்கு பசுக்களை இனவிருத்தி செய்து சந்தைக்கு வழங்குவதற்கு முடியாதிருந்தது. | பண்ணைகளைப் பேணும் குறிக்கோளை நிறைவேற்றும் வகையில் நடவடிக்கை எடுப்பதற்கு முகாமைத்துவம் முயற்சி எடுத்தல் வேண்டும். |

## 1.5.12 தலைப்பு 716 – காணி ஆணையாளர் திணைக்களம்

### வருமான முகாமைத்துவம்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|
| காணிகளை நீண்ட கால குத்தகைக்கு வழங்குவதற்காக காணி ஆணையாளர் நாயகம் வணிக அடிப்படையிலான குத்தகையாக வழங்கிய 110 நீண்டகால குத்தகை அனுமதிப்பத்திரங்களுக்குரிய 109 குத்தகைதாரர்களிடமிருந்து 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறு ரூபா 81,827,636 நிலுவையான குத்தகைப் பணம் அறவிடப்பட்டிருக்கவில்லை. | இப்பணத்தில் 7,976,473 பணம் அறவிடப்பட்டுள்ளது. குத்தகை மதிப்பீட்டுப் பணம் சம்பந்தமாக குத்தகைதார்கள் மேன்முறையீடு செய்தல், குத்தகைதாரர் மரணமடைதல், குத்தகை இரத்துச் செய்யப்படல், குத்தகை பணவீக்க செம்மையாக்கல் மேற்கொள்ளல் அவசியமாக இருத்தல் ஆகிய காரணங்களின் அடிப்படையில் இந்த நிலுவையான குத்தகைகளை அறவீடு செய்தல் தடையாக காணப்பட்டது. எனினும் நிலுவையான குத்தகைகளை அறவீடு செய்யும் நடவடிக்கையை தொடர்ச்சியாக மேற்கொள்வதற்குத் தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன. | அறவீடு செய்யவுள்ள நிலுவையான குத்தகைப் பணத்தை அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

## 1.5.13 தலைப்பு 721 – ஆயர்வேத திணைக்களம்

### பயன்படுத்தப்படாத மற்றும் குறைவாகப் பயன்படுத்தப்பட்ட சொத்துக்கள்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|
| ஊவா மாகாண ஆயர்வேத திணைக்களத்தினால் 2021 யூன் 18 ஆந் திகதி ரூபா 256,250 செலவு செய்து Innovex- 7Kg Fully Auto உடை கழுவும் இயந்திரங்கள் 05 கொள்வனவு | கொவிட் சிகிச்சை பிரிவு வாட்டுக்காக இந்த உபகரணங்கள் பெற்றுக்கொள்ளப்பட்டுள்ள துடன் தற்பொழுது | இந்த இயந்திரங்களைப் பயன்படுத்தி அரசாங்க சேவைகளைப் |

| | | | |
|---|---|---|---|
| | செய்யப்பட்டிருந்தும் அவற்றில் ரூபா 205,000 பெறுமதியான 04 இயந்திரங்கள் 2022 நவம்பர் 30 ஆந் திகதி வரை விளைவற்றுக் காணப்பட்டன. | ஏனைய சிகிச்சையளிக்கும் வைத்தியசாலைகளுக்காக அந்த உபகரணங்களை பயன்படுத்துவதற்கு அனுப்பிவைக்கப்பட்டுள்ளன. | பேணுவதற்காக மேற்கொள்ளப்படும் செலவுகளைக் குறைப்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

**1.5.14 தலைப்பு 726 – பிரதி பிரதம செயலாளர் (பொறியியல் சேவைகள்) அலுவலகம்**

**ஒப்பந்த நிருவாகத்திலுள்ள குறைபாடுகள்**

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|---|
| (i) | பெறுமதி சேர் வரியினைச் செலுத்துகின்ற பதிவுசெய்த ஒப்பந்தக்காரர்களுக்கு விலைப்பட்டியல்களைத் தீர்த்துவைக்கும் போது பணத்தை செலுத்துவதற்கு முன்னர் ஒவ்வொரு காலப்பகுதி தொடர்பாக ஒப்பந்தக்காரர்களின் வரிக் கோவைகளின் செயற்படும் தன்மையை உறுதிப்படுத்திக் கொள்வதற்காக தெளிவுபடுத்துதல் சான்றிதழ் வழங்கப்படுதல் வேண்டும். எவ்வாறாயினும் ஊவா மாகாண சபைக்குரிய இரண்டு நிறுவனங்களால் அமுல்ப்படுத்தப்பட்ட ஐந்து அபிவிருத்தி செயற்திட்டங்கள் தொடர்பாக அதற்கிணங்க நடவடிக்கை எடுக்கப்படாமையால் ஒப்பந்தக்காரருக்குச் செலுத்தப்பட்ட மொத்தமாக ரூபா 8,246,513 பெறுமதி சேர் வரியானது உள்நாட்டு இறைவரி ஆணையாளர் நாயகத்திற்கு அனுப்பிவைக்கப்பட்டிருக்கவில்லை. | ஊவா மாகாண சபையின் உத்தியோகத்தர்களுக்காக நிர்மாணிக்கப்பட்டு வருகின்ற ஐந்து மாடி வீட்டுத் தொகுதியினை நிர்மாணித்த ஒப்பந்தக்காரர்களான தெனுவன் இன்ஜினியரிங் தனியார் கம்பனி 114505005 ஆம் வெட் பதிவுசெய்தல் இலக்கத்தின் கீழ் செயற்படுகின்ற வரி செலுத்துபவர் என உள்நாட்டு இறைவரி ஆணையாளரினால் வழங்கப்பட்டுள்ள 2017-06-09 ஆந் திகதிய கடிதத்தின் மூலம் உறுதிப்படுத்தப்பட்டுள்ளது. | வரி செயற்பாட்டுத் தன்மையை உறுதிப்படுத்தி தெளிவாக்கல் சான்றிதழின் அடிப்படையில் பெறுமதி சேர் வரியினைச் செலுத்துவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ii) | ஊவா மாகாண சபையின் உத்தியோகத்தர்களுக்காக ஐந்து மாடி வீட்டுத் தொகுதியினை நிர்மாணித்தல் 2016 ஆம் ஆண்டின் போது ரூபா 131.2 மில்லியனுக்கு மதிப்பீடு | இந்த நிர்மாண வேலை 2016 ஆம் ஆண்டின் போது ஆரம்பிக்கப்பட்டிருந்ததுடன் கேள்வி வழங்குதல் ஏற்றுக்கொள்ளப்படாததன் | ஒப்நதத்திற்குரிய மிகுதி வேலைகளை துரிதமாகப் பூர்த்தி செய்து உத்தியோகபூர்வ |

செய்யப்பட்டிருந்ததுடன் ரூபா 88.1 மில்லியனுக்கு ஒப்பந்தம் வழங்கப்பட்டிருந்தது. 2018 மே 09 ஆந் திகதி வேலையை முவுறுத்துவதற்கு நிர்ணயிக்கப்பட்டிருந்த இந்த நிர்மாண வேலைகளுக்காக ஒப்பந்தக்காரருக்கு ரூபா 49.7 மில்லியன் செலுத்தப்பட்டிருந்தும் இன்றுவரை நிர்மாண வேலைகள் முடிவுறத்தப்பட்டிருக்கவில்லை. நிர்மாண வேலைகளின் மிகுதி 45 சதவீதமான தாமதித்த வேலைப்களைப் பூர்த்திசெய்துகொள்வதற்காக ரூபா 155.2 மில்லியன் மதிப்பீடு சமர்ப்பிக்கப்பட்டிருந்தது. ஒப்பந்த நிருவாகத்திலுள்ள பலவீனங்களினால் இந்த நிர்மாண வேலையின் நிர்மாண நடவடிக்கைகளில் 04 ஆண்டுகள் தாமதம் அவதானிக்கப்பட்டதுடன் மதிப்பீட்டினை அடிக்கடி திருத்தம் செய்யப்பட்டதன் அடிப்படையில் ரூபா 88.1 மில்லியனுக்கு நிர்மாண நடவடிக்கைகளை மடிவுறத்தக்கூடியதாகவிருந்த நிர்மாண வேலைகளுக்காக ரூபா 204.9 மில்லியனை செலவு செய்ய வேண்டிய ஏற்பட்டிருந்தது. அதற்கிணங்க தொடக்க மதிப்பீட்டினை மிகைத்து இன்னும் நிறைவேற்றப்பட வேண்டிய வேலைகளைப் புர்த்திசெய்வதற்கு ரூபா 73.7 மில்லியனை மிகையாக செலுத்த வேண்டி ஏற்பட்டிருந்தது.

காரணமாக நீதிமன்ற நடைமுறையின் மூலம் நிறுத்தப்பட்டது. அதற்கிணங்க இரண்டாவது பெறுகை 2017-09-14 ஆந் திகதி ஆரம்பிக்கப்பட்டதுடன் 2019 ஆம் ஆண்டின் ஆரம்பம் வரை வெற்றிகரமாக நிர்மாண நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன. 2019 ஆம் ஆண்டளவில் ஒப்பந்தக்காரரின் அதிக சுகவீன நிலைமை மற்றும் அவரின் வியாபார நடவடிக்கைகள் முறிவடைந்ததன் (Bankrupt) காரணமாக 2020 ஆம் ஆண்டின் போது மூன்றாவது பெறுகை நடவடிக்கைகளுக்கு அனுப்பிவைக்கப்பட்டுள்ள துடன் அப்போது நாட்டில் காணப்பட்ட நிலைமைக்கு இணங்க அவரினால் ஒருதலைப்பட்சமாக உடன்படிக்கை இரத்துச் செய்யப்பட்டது. 2022 ஆம் ஆண்டின் போது மீண்டும் ஒரு தடவை பெறுகை நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டது. அதன் போது போது காணப்பட்ட நிதி நிலைமைக்கு இணங்க பகுதியளவில் மிகுதிச் செயற்பாட்டினைப் பூர்த்தி செய்வதற்கு திட்டமிடப்பட்டது. 2023-05-09 ஆந் திகதி நடைபெற்ற பாராளுமன்ற அரசாங்க கணக்குகள் குழுவிற்கு காணப்பட்ட நிலைமை தெரியப்படுத்தப்பட்டது.

இல்லங்களை உத்தியோகத்தர்களுக்கு வழங்குவதற்கு துரிதமாக நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.

| | | | |
|---|---|---|---|
| (iii) | நோய்க்கான சிகிச்சை சேவைகளை மேம்படுத்துதல் மற்றும் வெளிநாட்டவர்களுக்கு ஆயுர்வேத வசதிகளை வழங்கி வருமானத்தை உழைப்பதனை குறிக்கோளாகக் கொண்டு மாகாண குறித்தொதுக்கிய அபிவிருத்தி மானியத்தின் (PSDG) கீழ் 2021 ஆம் ஆண்டில் ரூபா 05 மில்லியன் நிதி ஏற்பாடு மற்றும் மிகுதி நிதி ஏற்பாட்டினை அடுத்துவரும் ஆண்டுகளில் ஒதுக்கீடு செய்யும் குறிக்கோளுடன் பல்லகெடுவ ஆயுர்வேத வைத்தியசாலையில் சமயலறை மற்றும் மருந்தகத்தினை நிர்மாணிக்கும் நிர்மாண வேலைகள் ஆரம்பிக்கப்பட்டிருந்தன. இதற்காக ஊவா மாகாண ஆயர்வேத ஆணையாளரால் 2021 யுலை 07 ஆந் திகதி ரூபா 23,773,512 மதிப்பீடு அங்கீகரிக்கப்பட்டிருந்ததுடன் ஒரு தனியார் நிறுவனத்துடன் ரூபா 19,298,823 சிவில் வேலைப் பெறுமதிக்கு 2021 செப்தெம்பர் 06 ஆந் திகதி உடன்படிக்கை செய்யப்பட்டிருந்தது. உடன்படிக்கையின் பிரகாரம் 2022 மார்ச் 05 ஆந் திகதி நிர்மாண நடவடிக்கைகளைப் பூர்த்திசெய்வதற்கு நிர்ணயிக்கப்பட்டிருந்தும் 2023 பெப்ரவரி 22 ஆந் திகதி மேற்கொள்ளப்பட்ட பௌதீகப் பரிசோதனையின் போது மதிப்பீட்டில் குறிப்பிட்ட வேலைப் பகுதிகளில் 45 சதவீதம் அளவானவை நிறைவேற்றப்பட்டு நிர்மாண நடவடிக்கைகள் நிறுத்திவைக்கப்பட்டிருந்தன. நிறைவேற்றப்பட்ட வேலைகளுக்காக ரூபா 2,158,689 செலுத்தப்பட்டிருந்தது. | நிர்மாண வேலைகளின் மிகுதி நடவடிக்கைகளை 2024 ஆம் ஆண்டின் போது மேற்கொள்வதற்கு தீர்மானிக்கப்பட்டதுடன் 03/2022 ஆம் இலக்க தேசிய பாதீட்டு சுற்றிக்கையின் பிரகாரம் தற்பொழுது நிர்மாண வேலையின் உடன்படிக்கை இரத்துச் செய்யப்பட்டது. | ஒப்பந்த நிருவாகம் சம்பந்தமாக உரிய தரப்பினர்கள் அதிக கவனம் செலுத்தி உடன்படிக்கை செய்த காலத்திற்குள் நிர்மாண வேலைச் செயற்பாடுகளை பர்த்தி செய்து கொள்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

## 1.5.15 தலைப்பு 727 மாகாண வருமான வரித் திணைக்களம்

**இணக்கமின்மைகள்**

**சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் என்பவற்றுடனான இணக்கமின்மைகள்**

| சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் என்பவற்றுடனான தொடர்பு | இணக்கமின்மைகள் | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|---|
| **முகாமைத்துவ சேவை சுற்றிக்கை** | | | |
| 03/2018 ஆம் இலக்க 2018 யூலை 18 ஆந் திகதிய முகாமைத்துவ சேவைகள் சுற்றிக்கையின் II ஆம் பந்தி மற்றும் PS/PCMD/SD/01/08 ஆம் இலக்க 2019 மார்ச் 29 ஆந் திகதிய சனாதிபதி செயலாளரின் கடிதம் | பொதுத்திறை சேரியின் முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தின் முன் அங்கீகாரத்தினைப் பெற்றுக்கொள்ளாது அதேபேபால தேசிய சம்பளங்கள் மற்றும் பதவியணி ஆணைக்குழவினதும் நிதி ஆணைக்குழுவினதும் சிபாரிசினைப் பெற்றுக்கொள்ளாது ஊவா மாகாண இறைவரித் திணைக்களத்தின் பதவியணிக்கு 2018 ஆம் ஆண்டிலிருந்து 2022 தொடக்க அரை ஆண்டு வரை ஊக்குவிப்பு படியாக ரூபா 29,920,368 செலுத்தப்பட்டிருந்தது. | ஊவா மாகாண இறைவரித் திணைக்களத்தின் ஊக்குவிப்பு படியினைச் செலுத்துதலானது 2142/91 ஆம் இலக்க 2019/09/28 ஆந் திகதிய வர்த்தமானியின் மூலம் மேற்கொள்ளப்பட்டது. ஊக்குவிப்பு படியினைச் செலுத்தும் சபை நிதியம் தோற்றுவிக்கப்பட வேண்டுமென 1990 இன் 08 ஆம் இலக்க ஊவா மாகாண நிதி நியதிச்சட்டம் இலக்கம் 104(4) இன் கீழ் காட்டப்பட்டுள்ளது. இந்த ஊக்குவிப்பு படியினைச் செலுத்துதலானது சபை நிதியத்தினை வழங்கும் குறைந்த பெறுமதியுடனான தயாரிப்பு பத்திரத்தினைப் பரீட்சித்து அதற்காக மேலதிகமான கட்டணத்தின் மூலம் | தேசிய சம்பளங்கள் மற்றும் பதவியணி ஆணைக்குழுவின் மற்றும் நிதி ஆணைக்குழுவின் சிபாரிசினைப் பெற்றுக்கொள்வதற்கு நடவடிக்கை எடக்க வேண்டியதுடன் 03/2018 ஆம் இலக்க 2018 யூலை 18 ஆந் திகதிய முகாமைத்துவ சேவைகள் சுற்றிக்கையின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | | | மாகாண சபை நிதியத்திற்கு செலவு வைக்கப்படும் பணத்தின் மூலமாகும். |

**1.5.16 தலைப்பு 736 – பிரதிப் பிரதம செயலாளர் (நிதி முகாமைத்துவம்) அலுவலகம்**

**(அ) இணக்கமின்மைகள்**

**சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் என்பவற்றுடனான இணக்கமின்மைகள்**

| | சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் என்பவற்றுடனான தொடர்பு | இணக்கமின்மைகள் | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|---|---|
| | **தாபன விதிக்கோவை** | | | |
| (i)) | தாபன விதிக் கோவையின் XXIV ஆம் அத்தியாயத்தின் ஏற்பாடுகள் மற்றும் 2004 சனவரி 08 ஆந் திகதிய 2004/1 ஆம் இலக்க ஊவா மாகாண பிரதம செயலாளரின் கடன் மீதிகளைத் தீர்த்துவைத்தல் தொடர்பான சுற்றறிக்கை | ஊவா மாகாண சபையின் அமைச்சுக்கள், திணைக்களங்கள்,மற்றும் அலுவலகங்களில் சேவையாற்றி மரணமடைந்த மற்றும் ஓய்வுபெற்ற வேலையிலிருந்து இடைநிறுத்திவைக்கப்பட்ட மற்றும் சேவையை விட்டுச் சென்ற உத்தியோகத்தர்களிடமிருந்து அறவிட வேண்டிய ரூபா 74,528,288 கடன் மீதி சம்பந்தமாக தொடர்புபட்ட பிரமாணத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | 2012-12-31 ஆந் திகதியளவில் உள்ளவாறு காணப்பட்ட கடன் மீதி ரூபா 72,243,988 ஆக இருந்ததுடன் இக்கடன் மீதியானது மத்திய அரசாங்கத்தினதும் மாகாண சபையினதும் நிறுவனங்களுக்கிடையே காணப்பட்டன. இதற்கு மேலதிகமாக ஓய்வூதிய திணைக்களத்திடமிருந்து அறவிட வேண்டிய கடன் மீதி ரூபா 16,058,475 ஆகும். இக்கடன் மீதிகளை உரிய மாகாண சபைகளிலிருந்தும் மத்திய அரசாங்கத்தின் நிறுவனங்களிடமிருந்தும் அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுப்பேன். | தாபன விதிக் கோவையின் XXIV ஆம் அத்தியாயத்திலுள்ள ஏற்பாடுகளின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | | | |
|---|---|---|---|---|
| (ii) | நிதிப்பிரமாணம் நி.பி 571 | 2022 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறு 33 நிறுவனங்கள் தொடர்பாக 2 ஆண்டுகளை மிகைத்த தீர்த்துவைக்கப்படாத ரூபா 38,589,322 தொகையான பொதுவைப்பு மீதியாகும். | 2022-12-31 இல் உள்ளவாறு காணப்பட்ட இரண்டு ஆண்டுகளை மிகைத்த இந்த மீதி ரூபா 38,589,322 ஆகும். இதில் 2 ஆண்டுகளை மிகைத்திருந்தும் சட்டத்தேவைப்பாட்டின் அடிப்படையில் பேணப்பட வேண்டிய வைப்பு பணத்தை வைத்திருப்பதற்கும் மிகுதிப் பணத்தை தீர்த்துவைத்து எஞ்சியுள்ள மீதியை மாகாண சபை வருமானத்திற்கு எடுத்துக்கொள்வதற்கு நடவடிக்கை எடுப்பேன். | காலங்கடந்த வைப்புக்கள் சம்பந்தமாக நிதிப்பிரமாணம் 571 இற்கு இணங்க நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

**(ஆ) வருமான முகாமைத்துவம்**

| | | |
|---|---|---|
| 2022 திசெம்பர் 31இல் உள்ளவாறு ஒட்டுமொத்த வருமானங்களின் மொத்த தேறிய நிலுவைப் பணம் ரூபா 159,955,481 ஆக இருந்ததுடன் அந்த நிலுவைப் பணத்தை அறவீடு செய்வதற்கு போதிய நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | நிலுவைப் பணத்தை அறவீடு செய்வதற்காக உரிய நிறுவனங்களுக்கு தற்பொழுது தெரியப்படுத்தப்பட்டுள்ளது. அந்த நிலுவைப்பணத்தை அறவீடு செய்வது சம்பந்தமாக தற்பொழுது நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது. | நிலுவைப்பணத்தை அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

**1.5.17 தலைப்பு 737 – பிரதிப் பிரதம செயலாளர் (பெறுகைகள்) அலுவலகம்**

**(அ) இணக்கமின்மைகள்**

**சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் என்பவற்றுடனான இணக்கமின்மைகள்**

| **சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் என்பவற்றுடனான தொடர்பு** | **இணக்கமின்மைகள்** | **பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள்** | **சிபாரிசுகள்** |
| --- | --- | --- | --- |
| **(அ)ஊவா மாகாண சபை நிதி விதிக் கோவை** | | | |
| **நிதி விதி 104.2, 104.3 மற்றும் 104.4** | பிரதிப் பிரதம செயலாளர் (பெறுகைகள்) பொறுப்பில் காணப்பட்ட 2021 திசெம்பர் 10 ஆந் திகதி அல்லது அதற்கு அண்மித்த திகதியில் காணாமல் போயிருந்த ரூபா 92,000 பெறுமதியான லெப்டொப் கணனி இயந்திரம் தொடர்பாக 2023 சனவரி 16 ஆந் திகதியளவில் சமர்பிக்கப்பட வேண்டிய தொடக்க விசாரணை அறிக்கையும் நட்டம் இடம்பெற்ற திகதியிலிருந்து மூன்று மாதங்களுக்குள் சமர்ப்பிக்கப்பட வேண்டிய முழுமையான அறிக்கையும் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. | முழுமையான அறிக்கையை துரிதமாக பெற்றுக்கொள்வதற்கு நடவடிக்கை எடுப்பேன். | நிதிவிதிக் கோவையில் தொடர்புபட்ட விதியின் பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| **(ஆ)அரசாங்க நிருவாக சுற்றிக்கை** | | | |
| 2018 பெப்ரவரி 20 ஆந் திகதிய 03/2018 ஆம் இலக்க அரசாங்க நிருவாக சுற்றிக்கையின் | அரசாங்க சேவையிலிருந்து ஓய்வு பெற்றுச் சென்ற ஒரு உத்தியோகத்தர் சேவை மீறலுடன் அல்லது மீறல் இன்றி ஏற்கனவே வகித்த பதவியில் மீண்டும் சேவையில் ஈடுபடுத்தப்படும் போது அவருக்கு | இது சம்பந்தமாக அரசாங்க நிருவாக அமைச்சிடம் விசாரிக்கப்பட்டுள்ளதுடன் கடைசியாக ஓய்வுபெற்ற உத்தியோகத்தர்களை மீண்டும் சேவையில் ஈடுபடுத்தும் போது | 3/2018 ஆம் இலக்க அரசாங்க நிருவாக சுற்றிக்கையின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட |

| | | | |
|---|---|---|---|
| 03/(1) ஆம் பந்தி | அரசாங்க சேவையில் கடைசியாக கிடைத்த சம்பளத்திற்கு சமமான மாதாந்த படியினை செலுத்தலாம் என்பதுடன் 04 ஆம் பந்தியின் பிரகாரம் ‘‘கடைசியாக கிடைத்த சம்பளம்’’ என்பது உத்தியோகத்தர் ஓய்வுபெற்றுச் சென்ற சந்தர்ப்பத்தில் பெற்றுக்கொண்டிருந்த சம்பளமாக குறிப்பிடப்படுகின்றது. அதற்கு கடைசி சம்பள ஏற்றத் திகதியிலிருந்து ஓய்வுபெற்றுச் சென்ற திகதி வரையான சம்பள ஏற்றத்தில் உழைக்கப்பட்ட பகுதி உள்ளடக்கப்படுவதில்லை எனவும் காட்டப்பட்டிருந்தது. அவ்வாறே சுற்றிக்கையின் 5 ஆம் பந்தியின் பிரகாரம் ஓய்வு பெற்ற உத்தியோகத்தருக்கு அவர் ஓய்வுபெறும் சந்தர்ப்பத்தில் பெற்ற சம்பளமானது பின்னைய சந்தர்ப்பத்தில் திருத்தம் செய்யப்பட்டிருக்குமாயிருந்தால் மேற்கூறிய சுற்றிக்கையின் 12 ஆம் பந்தியின் பிரகாரம் ஒப்பந்த அடிப்படையில் சேவையில் ஈடுபட்ட எந்த ஒரு உத்தியோகத்தரினதும் ஓய்வூதியத்தினைப் திருத்தம் செய்யும் இயலுமை இல்லை. எவ்வாறாயினும் ஊவா மாகாண சபையில் ஓய்வுபெற்று மீண்டும் சேவையில் அமர்த்தப்பட்ட 14 உத்தியோகத்தர்களுக்கு சுற்றறிக்கைக்கு இணக்கமற்ற வகையில் ரூபா 3,728,598 சம்பளம் செலுத்தப்பட்டிருந்தது. | அவருக்கு செலுத்திய ஓய்வுதிய படி சம்பந்தமாக அறிவுறுத்தல்கள் வழங்கப்பட்டன. அதற்கு இணங்கிய வகையில் உரிய படியினைச் செலுத்துதல் இடம்பெற்றுள்ளது எனக் குறிப்பிடுகிறேன். அக்கடிதத்தினாலும் வெளிப்படுத்தப்படாத ஏதாவது கொடுப்பனவு செய்யப்பட்டிருக்குமாயிருந்தால் அறவீடு செய்வதற்காக தெரியப்படுத்தப்பட்டுள்ளது. | வேண்டியதுடன் சுற்றிக்கைக்கு புறம்பாக செலுத்தப்பட்டுள்ள சம்பளங்கள் மற்றும் படிகளை அறவீடு செய்தல் வேண்டும். |

## 1.5.18 தலைப்பு 738 – பிரதிப் பிரதம செயலாளர் (நிருவாகம்) அலுவலகம்

### இணக்கமின்மைகள்

### சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் என்பவற்றுடனான இணக்கமின்மைகள்

| சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் என்பவற்றுடனான தொடர்பு | இணக்கமின்மைகள் | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
| --- | --- | --- | --- |
| **(i) தாபன விதிக் கோவை** | | | |
| தாபன விதிக் கோவையின் VII ஆம் அத்தியாயத்தின் 12.2.1 ஆம் பந்தி மற்றும் 1589/30 ஆம் இலக்க 2009 பெப்ரவரி 20 ஆந் திகதிய அதிவிசேட வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்ட அரசாங்க சேவை ஆணைக்குழு செயற்பாட்டு நடைமுறை விதிக் கோவையின் 120 ஆம் விதி | பதிற்கடமை ஆற்றுவதற்கு ஒரு உத்தியோகத்தரை நியமிக்கும் போது பதில் கடமை நியமனம் கிடைக்கும் உத்தியோகத்தர் வசிக்கும் நிரந்தர பதவிக்கு சமமான நிலையிலுள்ள ஒரு பதவிக்கு அல்லது மேற்கூறிய நிலையிலுள்ள ஒரு பதவிக்கு நியமித்தல் வேண்டும். எவராவது ஒரு உத்தியோகத்தரின் நிரந்தர பதவியினை விட கீழ் மட்ட பதவியில் பதில் கடமை பார்க்கும் போது பதில் கடமை படியினைச் செலுத்துவதற்கு முடியாதிருந்த போதிலும் அதற்கு இணக்கமற்ற வகையில் தான் வகிக்கும் நிரந்தர பதவியினை விட குறைந்த பதவிகளில் பதில் கடமை பார்ப்பதற்கு நியமிக்கப்பட்ட 08 உத்தியோகத்தர்களுக்காக 01 ஆண்டிலிருந்து 05 ஆண்டுகள் வரையான காலத்தில் பதில்கடமை பார்க்கும் படியாக ரூபா 2,434,935 | நிரந்தரப் பதவிகளில் காணப்படுகின்ற வெற்றிடங்கள் தொடர்பாக தற்பொழுது காணப்படுகின்ற சட்டரீதியான நிலைமைக்கு இணங்க நியமிப்பதற்கு போதியளவு உத்தியோகத்தர்கள் இல்லாத சந்தர்ப்பத்தில் உயர்ந்த பதவிகளிலுள்ள உத்தியோகத்தர்களும் உரிய பதவிகளில் பதில் கடமை பார்ப்பதற்காக மற்றும் பதில் கடமைபார்ப்பதற்காக நியமிப்பதற்கு முடியாத சந்தர்ப்பத்தில் கடமைகளை நிறைவேற்றுவதற்காக ஆளுனரின் முறைப்படியான நியமனத்தின் அடிப்படையில் அச்சேவையில் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர் எனக் குறிப்பிடுகிறேன். விசேடமாக நாடளாவிய சேவைகள் தொடர்பாக இருக்க வேண்டிய உத்தியோகத்தர்களின் எண்ணிக்கையில் அரைவாசி அளவானவை இந்த | தாபன விதிக் கோவையின் VII ஆம் அத்தியாயத்தின் 12.2.1 ஆம் பிரிவு மற்றும் 1589/30 ஆம் இலக்க 2009 பெப்ரவரி 20 ஆந் திகதிய அதிவிசேட வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்ட அரசாங்க சேவை ஆணைக் குழுவின் செயல் நடைமுறை விதிக் கோவையின் 120 ஆம் விதியில் குறிப்பிட்ட ஏற்பாடுகளின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | | | |
|---|---|---|---|---|
| | | செலுத்தப்பட்டிருந்தது. | மாகாணத்தில் சேவையில் ஈடுபடுத்தப்பட்டுள்ளதனால் அவ்வாறான தீர்மானம் எடுப்பதற்கு காரணமாக இருந்தது. | |
| (ii) | **பாதீட்டு சுற்றிக்கை** | | | |
| | 2014 சனவரி 01 ஆந் திகதிய 01/2014 ஆம் இலக்க சுற்றிக்கையின் 2.1.3 (ii) ஆம் பந்தி | அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான எரிபொருள் படியினைச் செலுத்தும் போது உரிய மாதத்தின் முதலாம் திகதி இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தினால் வெளியிடப்பட்டுள்ள சாதாரண பெற்றோல் மற்றும் டீசல்களின் விலைகளை அடிப்படையாகக் கொண்டு கணிப்பீடு செய்யப்பட வேண்டி இருந்தது. அந்த அறிவுறுத்தல்களை கவனத்தில் கொள்ளாது உத்தியோகபூர்வ வாகனங்களுக்கு தகமை பெற்றுள்ள 72 உத்தியோகத்தர்களுக்கு மாதத்தின் முதலாவது திகதியில் காணப்பட்ட ஒரு லீற்றர் எரிபொருளின் விலையாக சுப்பர் பெற்றோல் மற்றும் டீசல் களின் விலைகளை அடிப்படையாகக் கொண்டு மாதாந்த எரிபொருள் படி கணிப்பீடு செய்யப்பட்டு 2009 சனவரியிலிருந்து 2022 யுலை மாதம் வரையான காலத்தினுள் ரூபா 7,842,436 மேதிகமாக எரிபொருள் படி செலுத்தப்பட்டிருந்தது. | உத்தியோகபூர்வ வாகனங்களுக்கு தகமையுள்ள உத்தியோகத்தர்களுக்கு எரிபொருள் படியினைச் செலுத்துவது சம்பந்தமாக நிர்ணயிக்கப்பட்ட எரிபொருள் வகை குறிப்பிடப்படவில்லை. அதற்கிணங்க விசேடமாக அரசாங்கத்தின் புதிய வாகனங்களுக்காக தொழில்நுட்ப சிபாரிசின் பிரகாரம் விசேட எரிபொருள் வகை நிர்ணயிக்கப்பட்டுள்ள சந்தர்ப்பங்களில் வாகனங்களுக்காக அந்த எரிபொருள் வகையினை பயன்படுத்துதல் மேற்கொள்ளப்படும். எவ்வாறாயினும் கடந்த காலத்ததின் போது எரிபொருள் விலை அதிகரித்தலும் எரிபொருள் தட்டுப்பாடும் அதற்கிணங்க எரிபொருள் வகைகள் சந்தையில் காணப்படாமை என்பவற்றை கவனத்தில் கொண்டு 2022 யூன் மாத்திலிருந்து சாதாரண எரிபொருளுக்காக கொடுப்பனவு செய்வதாக தீர்மானிக்கப்பட்டுள்ளது. | 2014 சனவரி 01 ஆந் திகதிய 01/2014 ஆம் இலக்க தேசிய பாதீட்டு சுற்றறிக்கையின் 2.1.3 (ii) ஆம் பந்தியின் பிரகாரம் மிகையாக செலுத்திய பணத்தை மீள அறவீடு செய்தல் வேண்டும். |

## 2. நிதி மீளாய்வு

### (அ) நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றக்களின் பிரகாரம் மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான மாகாண சபை நிதியத்தின் செயற்பாடுகளின் நிதி விளைவுகள் ரூபா 3,328,737,257 பற்றாக்குறையாக இருந்ததுடன் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டிற்கான பற்றாக்குறை ரூபா 2,205,982,794 ஆகும். அதற்கிணங்க முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் மீளாய்வாண்டிற்கான நிதி விளைவுகள் ரூபா 1,122,754,463 ஆல் வீழ்ச்சியடைந்திருந்தது.

### (ஆ) வருமானம் மற்றும் செலவு முரண்கள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் மீளாய்வாண்டு மற்றும் முன்னைய ஆண்டுகளுக்கான வருமானம் மற்றும் செலவுகள் தொடர்பான பொழிப்புக்கள் கீழே தரப்படுகின்றன.

வருமானம்

| மாகாண சபை விடயங்களுக்குரிய வருமானங்கள் | 2022 உள்ளபடியானவை | 2021 உள்ளபடியானவை | முரண் |
|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா |
| வரி வருமானம் | 1,583,187,067 | 1,513,326,027 | 69,861,040 |
| வரியற்ற வருமானம் | 670,373,795 | 612,779,708 | 57,594,087 |
| அரசாங்க மானியம் | 28,518,761,554 | 28,343,106,749 | 175,654,805 |
| | .......................... | ................... | .................. |
| மொத்தம் | 30,772,322,416 | 30,469,212,484 | 303,109,932 |
| | ..................... | .................... | ................ |

செலவுகள்

| | 2022 உள்ளபடியானவை | 2021 உள்ளபடியானவை | முரண் |
|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா |
| மீண்டுவரும் செலவுகள் | | | |
| | 23,781,726,765 | 21,985,850,940 | 1,795,875,825 |
| ஏனைய மீண்டுவருபவை | 9,601,454,352 | 9,362,993,485 | 238,460,867 |
| | ................... | ................... | .................. |
| உபமொத்தம் | 33,383,181,117 | 31,348,844,425 | 2,034,336,692 |
| மீண்டுவரும் தன்மையான அபிவிருத்தி செலவுகள் | 717,878,555 | 1,326,350,852 | (608,472,297) |
| | ..................... | .................... | ................ |
| மொத்தம் | 34,101,059,672 | 32,675,195,277 | 1,425,864,395 |
| | ..................... | .................... | ................ |

| | | | |
|---|---|---|---|
| மிகை/பற்றாக்குறை | (3,328,737,256) | (2,205,982,793) | (1,122,754,463) |
| - மீண்டுவரும் தன்மையான அபிவிருத்திச் செலவுகள் | | | 717,878,555 |
| - நிலையான சொத்துக்களாக கணக்கீடு செய்யப்படுகின்ற மூலதனமாக்கப்படு கின்ற செலவுகள் | | | 1,160,358,120 |
| | | | .................. |
| அரசாங்க முதலீடுகள் | | | 1,878,236,675 |
| | | | ...................... |

மீளாய்வாண்டிற்கான மொத்த வருமானம் ரூபா 30,772,322,416 ஆக இருந்ததுடன் அதில் ரூபா 28,518,761,554 அரசாங்கத்தின் மானியமாகும். வரி வருமானம் ரூபா 1,583,183,067 அதாவது மொத்த வருமானத்தில் 5 சதவீதமும் வரியற்ற வருமானம் ரூபா 670,373,795 அதாவது மொத்த வருதமானத்தில் 2 சதவீதமாக இருந்தது. ஆண்டிற்கான மொத்த வருமானமாகிய ரூபா 30,772,322,416 இல் மீண்டுவரும் செலவுகளுக்காக (பெறுமானத் தேய்வினைத் தவிர்த்து) ரூபா 28,729,939,180 அதாவது 94 சதவீதமும் அரசாங்க முதலீட்டிற்காக ரூபா 1,878,236,675 அதாவது 06 சதவீதமும் பயன்படுத்தப்பட்டிருந்தது.

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 செயலாற்றல்

#### (அ) அரசாங்க மானியம்

மாகாண சபை அபிவிருத்தி நிகழ்சித்திட்டத்திற்காக கிடைத்த நிதி ஏற்பாடு மற்றும் அவற்றினைப் பயன்படுத்துதல் தொடர்பான விபரம் கீழே தரப்படுகின்றன.

| **மூலம்** | | **அங்கீகரித்த தொகை ரூபா** | **செலவு செய்த தொகை ரூபா** | **குறைந்த பயன்பாடு ரூபா** |
|---|---|---|---|---|
| (அ) | பருமனளவு அடிப்படையிலான மானியம் | 165,000,000 | 92,400,000 | 72,600,000 |
| (ஆ) | மாகாண விடயத்தை குறித்தொதுக்கிய அபிவிருத்தி மானியம் | 1,698,000,000 | 908,000,000 | 790,000,000 |

| | | | | |
|---|---|---|---|---|
| (இ) | உலக வங்கி உதவிகள் | | | |
| | - விசேட பிரிவு அபிவிருத்தி செயற்திட்ட மானியம் (கல்வி) | 330,000,000 | 300,000,000 | 30,000,000 |
| | - விசேட பிரிவு செயற்திட்ட மானியம் (சுகாதாரம்) | 560,000,000 | 560,000,000 | - |
| | மொத்தம் | 2,753,000,000 | 1,860,400,000 | 892,600,000 |

**(ஆ) மாகாண அபிவிருத்தி திட்டம்**

மீளாய்வாண்டிற்கான மாகாண அபிவிருத்தி திட்டத்தின் கீழ் புதிய வேலைகள் மற்றும் தொடர்ச்சியான வேலைகளுக்காக ரூபா 2,950 மில்லியன் மதிப்பீட்டுப் பெறுமதியான 1,035 செயற்திட்ட பிரேரணைகள் அங்கீகரிக்கப்பட்டிருந்தன. மாகாண சபையின் செயல்முன்னேற்ற அறிக்கையின் பிரகாரம் செயற்திட்ட வேலைப் பிரேரணைகளின் செயல்முன்னேற்றம் பின்வரும் அட்டவணையில் தரப்படுகின்றன.

| **மூலம்** | | **புதிய வேலைப் பிரேரணைகளின் எண்ணிக்கை** | **தொடர்ச்சியான வேலை பிரேரணைகளின் எண்ணிக்கை** | **மொத்த வேலைப் பிரேரணைகளின் எண்ணிக்கை** | **மொத்த வேலைகளின் மதிப்பீடு செய்யப்பட்ட பெறுமதி** |
|---|---|---|---|---|---|
| | | | | | **ரூபா** |
| (அ) | முழுமையாகப் பூர்த்தி செய்யப்பட்டவை | 438 | 427 | 865 | 2,949,855,177 |
| (ஆ) | 50% இனைவிட அதிகமாக பூர்த்திசெய்தவை | 63 | 40 | 103 | |
| (இ) | 50% இனை விட குறைவாக பூர்த்திசெய்தவை | 27 | 18 | 45 | |
| (ஈ) | ஆரம்பிக்கப்படாதவை | 21 | 1 | 22 | |
| (உ) | சச்சரவுத் தன்மை/ பிரச்சினையான நிலையின் கீழுள்ளவை | - | - | - | |
| | மொத்தம் | 549 | 486 | 1,035 | |